2011 செப்டம்பர் 14]

7. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்

பட்டம் / பட்டயம் படித்த ஏழைப் பெண்களுக்கு உயர்த்தி வழங்கப்பட்டுள்ள ரூ.50,000 ரொக்கத்துடன் 4 கிராம் தங்கமும் மற்றும் பத்தாம் வகுப்பு வரை படித்த ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000 ரொக்கத்துடன் 4 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது. இத்திட்டம் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டித்து வழங்கப்படுகிறது.

8. பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் தமிழ் மக்களுக்கென நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டித்து வழங்கப்பட்டுள்ளது.

9. உட்கட்டமைப்பு

முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த அரசு ரூ.25 கோடி செலவில் முகாம்களில் உள்ள வீடுகளையும் அடிப்படை வசதிகளையும், மேம்படுத்தவுள்ளது.

10. சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி

நடப்பு நிதியாண்டில் இலங்கை அகதிகள் முகாமில் இயங்கும் 416 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றிற்கு ரூ.10,000 வீதம் சுழல் நிதிவழங்கப்படவுள்ளது.

11. நலவாழ்வு மற்றும் மருத்துவ உதவிகள்

அகதிகள் முகாமில் தங்கியுள்ள கருவுற்ற பெண்களுக்கும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. மேலும் கருவுற்ற பெண்களுக்கும் மற்றும் குழந்தைகளுக்கும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஊட்டச்சத்தான உணவு வழங்கப்படுகிறது.

12. இலங்கைத் தமிழர்களுக்கான சிறப்பு நிவாரண நிதி

முகாம்வாழ் இலங்கைத் தமிழர் விபத்தின் காரணமாக மரணம் அடைந்தால் அவரது வாரிசுகளுக்கு முதலமைச்சரின் இலங்கை அகதிகளுக்கான நிவாரண நிதியிலிருந்து ரூ 15,000 வழங்கப்படுகிறது.

[2011 செப்டம்பர் 14

13. இலங்கைத் தமிழர்கள் தாயகம் திரும்புதல்

தமிழ்நாட்டில் உள்ள அகதிகள் முகாம்களிலிருந்து, தாயகத்திற்கு திரும்பிச் செல்ல விரும்பும் அகதிகள் தங்களது சொந்த செலவில் அல்லது அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதர் (UNHCR) உதவியுடன் வெளி செல்ல அரசு அனுமதி வழங்குகிறது. 31-8-2011 வரை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதர் (UNHCR) உதவியுடன் 9,766 நபர்கள் இலங்கைக்குத் திரும்பியுள்ளனர்.

14. தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு

இந்திய குடியுரிமைப் பெற்ற தமிழ் வம்சாவளியினைச் சார்ந்த 1,46,500 நபர்கள் இதர நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியுள்ளனர். தாயகம் திரும்பியவர்களுக்கு மறுவாழ்வு உதவிகள் மற்றும் தேயிலை, இரப்பர், சிங்கோனா தோட்டங்களிலும், கூட்டுறவு நூற்பாலைகள், ரெப்கோ வங்கியின் தொழிற் திட்டங்கள் ஆகியவற்றில் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தாயகம் திரும்பியவர்களுக்கு ரெப்கோ வங்கிமூலமாக அளிக்கப்பட்ட நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	ஆண்டு	மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்)
1.	2010-2011-ம் ஆண்டு	92.36
2.	2011-2012-ம் ஆண்டு (15-08-2011 முடிய)	1.10

II முன்னாள் படைவீரர் நலன்

போர்முனையில் உயிர்த் தியாகம் செய்த தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் குடும்பத்தார், உடல் ஊனமுற்ற படைவீரரின் மறுவாழ்வு மற்றும் முன்னாள் படைவீரர்கள் மற்றும் படைவீரர் குடும்பத்தாரின் நலனைப் பேணிக் காப்பது முன்னாள் படைவீரர் நலத் துறையின் முக்கியப் பொறுப்புகளாகும். அனைத்து நலத் திட்டப் பணிகளும் 25 மாவட்ட அலுவலகங்கள்மூலம் நிறைவேற்றப்படுகின்றன.